## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

நான்காம் வருட /இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013 /2014

(ஜுலை/ஆகஸ்ட் 2015)

## TLS 4202 தற்காலத் தமிழ் இலக்கணம்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. ‘தற்காலத் தமிழ் இலக்கணம்’ என்ற பயில்நெறிக்கான தேவை குறித்துக் கருத்துரைக்குக. (25 புள்ளிகள்)

02. அ) மாற்றுப்பெயர் என்றால் என்ன? (05 புள்ளிகள்)
    ஆ) தற்காலத் தமிழில் மாற்றுப்பெயர் வழங்குமாற்றினை விளக்குக. (20 புள்ளிகள்)

03. மரபுத் தமிழ் இலக்கணகாரர் குறிப்பிடும் வேற்றுமைப் பாகுபாட்டின் தற்காலப் பொருத்தப்பாட்டினை ஏதாவது இரு வேற்றுமைகளை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

04. தற்காலத் தமிழில் வழங்கும் பெயரடைகளும், வினையடைகளும் சொல்லாக்கத்திற்கு உதவுமாற்றினை ஆராய்க. (25 புள்ளிகள்)

05. தற்காலத்தமிழில் காலம் உணர்த்தப்படும் முறைமை குறித்து ஆராய்க. (25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

    அ) முதல் வினை – துணை வினை.
    ஆ) தற்காலத் தமிழில் திணை – பால் பாகுபாடு.
    இ) தற்காலத் தமிழில் வழங்கும் மொழி இறுதிநிலை எழுத்துக்கள்.
    ஈ) பேச்சுத்தமிழில் உயிரொலிகளில் ஏற்படும் மாற்றங்கள்.

(12 ½ x2= 25 புள்ளிகள்)

*******************************************